1970 மார்ச் 7]

பட்டு, தளர்த்தப்பட்டு இருக்கின்றன. சான்றிதழ் கொடுப்பதற்கான விதிகள் தளர்த்தப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சிவசுப்பிரமணியன் அவர்கள், ஏழை எளியவர்களுக்குக் கடன் கிடைக்கவில்லையே, அவர்களுக்கும் கிடைக்கச்செய்யக் கூடாதா என்று கேட்டார்கள். ஏழை எளியவர்களுக்குக் கிடைக்காமல் இருந்த நிலைமையை மாற்றி, சட்டத்தைத் திருத்தித் துணை விதியைத் திருத்தி, ஏழை எளியவர்களுக்கு முதலிடம் கொடுக்கும் வகையில் செய்யப்படக்கூடிய நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது. முன்பெல்லாம் யாராவது 10 ஆயிரம் ரூபாய் வேண்டுமென்றால், அவர்கள் 25 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள நிலத்தைக் கொண்டிருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டது. ஆகவே 25 ஆயிரம் ரூபாய் அளவுக்கு நிலம் சொந்தமாக வைத்திருக்கிறவர்களுக்குத்தான் 10 ஆயிரம் 8 ஆயிரம் என்று கடன் கொடுத்துக் கொண்டு வந்தார்கள். இப்பொழுது புது விதியைப் போட்டு நிலத்தை வளப்படுத்தியதற்குப் பின்னாலே, பயனுள்ளதாக ஆக்கியதற்குப் பின்னாலே, நஞ்சையாக இருந்தால் என்ன மதிப்புப் பெறுமோ, அல்லது புஞ்சையாக இருந்தால் என்ன மதிப்புப் பெறுமோ, அதைப் பார்த்து ஏழை எளிய விவசாயிகளுக்குக்கூட 10 ஆயிரம் 12 ஆயிரம் ரூபாய் என்ற முறையிலே கடன் அளிக்கப்பட்டு வருகிறது. உறுப்பினர் அவர்கள் சொன்னது முன்னால் இருந்த நிலைமையே தவிர இப்பொழுதுள்ள நிலைமையல்ல.

Electricity connection to pumpsets in Megnanapuram

* 267 Q.—Thiru T. MARTIN : Will the Hon. the Minister for Electricty be pleased to state whether electricity connection has been granted to the agricultural pumpsets for which applications from the agriculturists of Megnanapuram village in Tirunelveli district have been pending?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மெஞ்ஞானபுரம் கிராம மக்களிடமிருந்து வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின்சக்தி வழங்கவேண்டி 30 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இவற்றில், 7 விசையேற்றங்களுக்கு மின்சக்தி வழங்கப்பட்டுள்ளது மற்ற 5 விசையேற்றங்களைப் பொறுத்தவரை, பணிகள் நடந்தேறி வருகின்றன. நான்கு விசையேற்றங்களைப் பொறுத்தவரையில் மதிப்பீடுகளுக்கு ஒப்பளிப்பு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. விண்ணப்பதாரர்கள் மின்சக்தியைப் பயன்படுத்திக் கொள்ளத் தயாராக இருப்பதைப் பொறுத்து, மின்சக்தி கொடுக்கப்படும். எஞ்சிய 14 விசையேற்றங்களைப் பொறுத்தவரையில் அவற்றிற்கு மின்சக்தி வழங்குவது ஆதாயமற்றதாகும் என்பதால் அவற்றிற்கு மின்சக்தி கொடுப்பதற்குத் தற்சமயம் இயலாது.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் சார். இந்த மெஞ்ஞானபுரம் பகுதியில் டிரான்ஸ்பார்மர்களை மாற்றித்தான் மின் இணைப்புக் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. உடனடியாக டிரான்ஸ்பார்

மர்களை மாற்றி எந்த எந்த இடங்களில் அதிகமாகக் கொடுக்கமுடியுமோ அந்த அந்த இடங்களிலே எல்லாம் அதிகமாகக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ.பி.இராமன்: தலைவர் அவர்களே, மெஞ்ஞானபுரத்தைப் பொறுத்தவரையில் அப்படி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. 30 அப்ளிகேஷன்கள் கொடுக்கப்பட்டு அவற்றிலே 7 இடத்திற்கு இப்பொழுது கொடுத்திருக்கிறோம்; இன்னும் 14 இடத்திற்கு கொடுக்காமல் இருப்பதற்குக்காரணம் நாட்பீஸிபிள் ஆக இருப்பதால்தான். இன்னும் சில அப்ளிகேஷன்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. கனம் உறுப்பினர் கூறுகிற தகவல் என்னிடத்திலே இல்லை.

திருநெல்வேலி மாவட்டத்துக்கு மாநிலத் தொழிலாளர் காப்புறுதி மருத்துவ மனைகள்

*** 268 வினா—திரு. டி. மார்டின்:** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடியிலும், விக்கிரம சிங்கபுரத்திலும் தொழிலாளர் இன்சூரன்ஸ் ஆஸ்பத்திரிகள் நடப்பு ஆண்டில் தொடங்கப்படும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: (அ) (இ) காப்புறுதி செய்துகொண்டவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினர்களுக்கும் அகப்பிணி மருத்துவ வசதிகள் செய்து கொடுப்பதற்காக திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடியிலும், விக்கிரமசிங்கபுரத்திலும் மாநிலத் தொழிலாளர் காப்புறுதி மருத்துவ மனைகள் கட்டுவதற்கான செயற்குறிப்புகள் இருந்தன. தொழிலாளர் அரசுக் காப்புறுதி நிறுவனம் நிதி நிலையை மறு பரிசீலனை செய்த பின்னர், போதிய நிதி வசதியில்லாத காரணத்தால், ஒப்புதலளிக்கப்பட்ட திட்டங்களுக்காகவும், புதிய கட்டடங்கள் கட்டும் பணி மேற்கொள்ள இயலாதென 1968-ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் அரசுக்குத் தெரிவித்தது. எனவே தற்சமயம் இந்த இரண்டு இடங்களிலும் தொழிலாளர் அரசுக் காப்புறுதி மருத்துவ மனைகள் கட்டுவதற்கு இயலாது.

ஆனால் மேற்கண்ட மருந்தகங்கள் மாநில அரசுக்குரிய கட்டடங்களில் நடந்துவருகின்றன.

திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுடன் இன்னும் அதிகமாக நம்முடைய மாநில அரசு போராடாவிட்டாலும் நியாயமாக அடிக்கடி கேட்டு அம்பாசமுத்திரத்திலும், தூத்துக்குடியிலும் மருத்துவ மனைகளை மத்திய அரசின் உதவியில் நல்லமுறையில் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.